Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 3, 2023

வியாழக்கிழமை ஓகஸ்ட் 03, 2023 | ஒளி: 09 கதிர் 054 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | Free

## இறக்குமதியை நிறுத்த கோரிக்கை



நாட்டில் திரவப் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால் பால் மா இறக்குமதியை நிறுத்துமாறு அரச பால் உற்பத்தி நிறுவனங்களின் அதிகாரிகள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுத்தனர். அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் அரசுக்கு சொந்தமான பால் நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

தொடர்ச்சி P2



## 45 ஆயிரம் தொன் எரிபொருள் கொண்டுவந்தது சினோபெக்

சினோபெக் திட்டத்தின் முதல் தொகுதியான 45 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தொகுதிகள், எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்தும் மற்றும் அந்நிய செலாவணி சவாலை எளிதாக்கும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




உள்நாட்டு கொடுப்பனவுகளுக்காக

# இலங்கையில் இந்திய ரூபாய் செல்லாது

### அறிவிப்பை வெளியிட்டது மத்திய வங்கி

பெயர்குறிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாவினை அங்கீகரித்தமையானது உள்நாட்டு கொடுப்பனவு அல்லது தீர்ப்பனவுக்கு இலங்கையில் இந்திய ரூபாவை சட்ட பூர்வமான நாணயமாக ஏற்படுத்தியதாகாது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

இலங்கையில் வதிபவர்களுக்கிடையில் அல்லது அவர்கள் மத்தியில் நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல் இலங்கையின் சட்டபூர்வ நாணயமாகவிருக்கின்ற இலங்கை ரூபாயிலேயே இருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய ரூபாய் தொடர்பில் சில தவறான கருத்துக்கள் தற்போது பொதுமக்கள் மத்தியில் பரப்பப்படுவதை தெளிவுபடுத்த விரும்புவதாக இலங்கை மத்திய வங்கி, புதன்கிழமை (02) தெரிவித்தது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் எல்லை கடந்த வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை வசதிப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்கு அதிகாரமளிக்கின்றது.

1979 மே தொடக்கம் இலங்கை மத்திய வங்கி அவ்வப்போது பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களை அங்கீகரித்துள்ளது. தற்போது பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக வங்கித்தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் 2022 ஒகத்தில் பிந்தியதாக உட்சேர்க்கப்பட்ட இந்திய ரூபாயுடன் பின்வரும் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

விலபத்து காடழிப்பு விவகாரம்

## உத்தரவுக்கு இடைக்காலத்தடை

வில்பத்து தேசிய பூங்காவின் வடக்கு சரணாலயத்தின் காடழிப்பு விவகாரத்தில், மரம் நடும் திட்டத்துக்கான முழுச் செலவையும் ஏற்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம், புதன்கிழமை (02) இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

## “சஜித் எனக்கு தலைவர் அல்ல”

■ பு.கஜிந்தன்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரிக்கும் வேலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கச்சிதமாக ஈடுபட்டு கொண்டு இருக்கின்றார் என்று தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அடுத்துவரும் நாட்களில் வர்ணமயமான காட்சிகளை எதிர்பார்க்கலாம் என்றார். யாழ்ப்பாணத்தில் புதன்கிழமை (02) காலை ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே இவ்வாறு இதனை தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



## ருஸ்திக்குக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

ரிதிதென்ன பவுஸர் விபத்தில் மரணமான 6 வயது சிறுவன் ருஸ்திக்கிக்கு நீதி கோரி பாரிய ஆர்ப்பாட்டமொன்று புதன்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்ன பகுதியில் கடந்த சனிக்கிழமை (29) இடம்பெற்ற தண்ணீர் பவுஸர் விபத்தில் 6 வயது சிறுவன் ஒருவன் மரணமடைந்தார்.

தொடர்ச்சி P2

மூத்த ஒலிபரப்பாளர்

## விமல் சொக்கநாதன் அகால மரணம்

இலங்கையின் மூத்த தமிழ் வானொலி ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன், தனது 75 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.



செவ்வாய்க்கிழமை (02) மாலை இடம்பெற்ற விபத்தொன்றிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

வானொலிக் கலைஞரும், ஒலிபரப்பாளருமான விமல் சொக்கநாதன், பத்திரிகைகளிலும் ஆக்கங்களை எழுதியுள்ளதுடன், லண்டனுக்கு சென்று சட்டப்படிப்பையும் முடித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## புதுக்குடியிருப்பில் மாண்புமிகு மலையகம் நடைபவனி

■ சண்முகம் தவசீலன்

“தலைமன்னார் முதல் மாத்தளைவரை” மாண்பு மிகு மலையகம்-200 நடைபவனிக்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சி வரையான நடைபவனி புதன்கிழமை (02) ஆரம்பமாகியிருந்தது.


இலங்கை வாழ் மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மலையக மக்களின் உரிமை மற்றும் அவர்களின் மூதாதையர் விட்டு சென்ற சுவடுகள் ஊடாக பயணிப்பதை நோக்காக கொண்டே இந்த நடைபவனி ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த ஆதரவுப் பயணத்தில் “மன்னார் முதல் மாத்தளை வரை” இருப்பை உறுதிப்படுத்துவோம் தோழமையை வலுப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடைபவனி காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகியிருந்தது.

தொடர்ச்சி P2

தேசிய கீதத்தை திரிவுபடுத்திய

## உமாராவை விசாரணைக்கு அழைத்தது அமைச்சு



தேசிய கீதத்தை திரிபுபடுத்தி பாடிய சம்பவம் குறித்து வாக்குமூலம் பதிவு செய்வதற்காக பாடகி உமாரா சின்ஹவன்சவை இன்றையதினம் (03) ஆஜராகுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் புலனாய்வு குழுவினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மலையக மாணவர்களுக்கு தமிழ் நாட்டின் உதவிகள்

### தமிழக அமைச்சருடன் அமைச்சர் ஜீவன் பேச்சு

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் தொழில் பயிற்சி கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தொழில்நுட்ப சார்பு உதவிகளை பெறுவது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



நுவரெலியா வைத்தியசாலையில்

## கண்பார்வை பாதிக்கப்பட்ட 16 பேர் குறித்து விசாரணை

■ டி.ஷங்கீதன், ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கண் பார்வை பாதிக்கப்பட்ட 16 பேர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக நியமிக்கப்பட்ட 10 பேர் கொண்ட விசேட வைத்திய நிபுணர்கள், செவ்வாய்க்கிழமை (01) நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2



## சஜித்துக்கு பொறாமை

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகவும் பொறாமையுடன் பார்க்கின்றார் என்றும் போராளிகளாலும் சதிகாரர்களாலும் அழிக்கப்பட்ட நாட்டை மீட்டு நாட்டின் எதிர்காலத்தை ஜனாதிபதி ரணில் உறுதிப்படுத்துகிறார் என்றும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளார் என சுட்டிக்காட்டிய அமைச்சர், உலகின் பலம் வாய்ந்த 4 நாடுகளின் தலைவர்கள் பத்து நாட்களில் சந்தித்துப் பேசியதன் மூலம் இது புலனாகிறது.

தொடர்ச்சி P2

## கிளியில் மேச்சல் நிலம் கோரி மாடுகளுடன் போராட்டம்

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் மேச்சல் நிலம் வழங்குமாறு கோரி மாடுகளுடன் பண்ணையாளர்கள், புதன்கிழமை (02) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த கால்நடைவளர்ப்பாளர்களே தங்களுக்குரிய மேச்சல் நிலத்தை கோரி இந்த கவனயீர்ப்பை மேற்கொண்டனர்.

நீண்ட காலமாக தங்களுக்குரிய மேச்சல் நிலம் தொடர்பில் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்த போதும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டனர்.

விதைப்பு மற்றும் வறட்சியான காலங்களில் தங்களது கால்நடைகளை வளர்ப்பதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தல் உரிய கவனம் செலுத்தி விரைவாக மேச்சல் நிலத்தை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

## 45 ஆயிரம்...

இரண்டாவது சினோபெக் எரிபொருள் தொகுதி புதன்கிழமை (02) நாட்டை வந்தடையும் என்று என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

எரிபொருள் நிலைய விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டு இறுதி செய்யப்பட்டவுடன், சினோபெக் நாடு முழுவதும் 150 எரிபொருள் நிலையங்களுடன் சில்லறை பெற்றோலிய நடவடிக்கைகளைத் ஆரம்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக் நிறுவனத்துடன் கடந்த மே மாதம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## உத்தரவுக்கு இடைக்காலத்தடை

சரணாலயத்தின் காடழிப்பு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்ய உத்தரவிடுமாறு ரிஷாட் பதியுதீன் எம்.பி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அப்போதைய அமைச்சர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வில்பத்து சரணாலயத்தில் காடழிப்பு, வீடமைப்புத் திட்டம் என்பன அமைக்கப்படுவதாகவும் மன்னார் மாவட்டத்துக்குட்பட்ட மடு, பெரியமடு, பிரதேசங்களிலும் காடழிப்பு இடம்பெறுவதாகவும் வில்பத்து பகுதியில் 2,000 ஏக்கரும் மடு, பெரியமடு பகுதிகளில் 1,000 ஏக்கரும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரணாலயத்தில் சுத்திகரிக்கப்பட்ட பகுதியில் ரிஷாட் பதியுதீனால், 1,500 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் வனத்தைக் காப்பதற்கான நடவடிக்கை எடுக்ககோரியும் மீள் மரநடுகைக்கு உத்தரவிடக்கோரியுமே மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய மீள் மர நடுகைக்கான முழுச் செலவையும் ஏற்குமாறு ரிஷாட் எம்.பிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கே இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## புதுக்குடியிருப்பில் மாண்புமிகு ...

நடைபயணத்தில் மலையக மக்களுக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினரின் பங்குபற்றுதலோடு, மத குருக்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊழியர்கள் மற்றும் A C G இளைஞர் அணியினர், வர்த்தக சங்கத்தினர், விழுது நிறுவன ஊழியர்கள், அமரா, சமாசம், யுகசக்தி மகளீர் சம்மேளன அங்கத்தவர்கள், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நடைபவனியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஆதரவை வழங்கும் விதமாக

தாய்த்தமிழ் பேரவையினால் தாக சாந்தி வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் முதல் மாத்தளை வரையான நடையணம் இச்சந்திப்பின் சந்தர்ப்பமாக அமைவதுடன் அவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் ஓர் ஆதரவுப் பயணமாகவும் ஆரம்பிக்கும் இப் பயணத்தில் இலங்கையின் அர்த்தமுள்ள பிரஜைகளாகுவதற்கு மலையகத் தமிழ் மக்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தே ஆரம்பித்துள்ளனர்.

எமது வரலாறு போராட்டம் மற்றும் பங்களிப்பினை ஏற்று அவற்றை அங்கீகரித்தல், ஏனைய பிரதான சமுகங்களுக்கு இணையான ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொண்ட சுரகந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஒரு பகுதி மக்களாக அங்கீகரித்தல்.

தேசிய சராசரிகளுடன் சமநிலையை எட்டுவதற்காக விசேடமாக இச்சமூகத்தை இலக்கு மனத்து விசேட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை வலியுறுத்தப்படுகிறது.

# இலங்கையில் இந்திய ரூபாய் செல்லாது

அவுஸ்திரேலிய டொலர், கனேடிய டொலர், சீன ரென்மின்பீ, டெனிஷ் குறோணர், யூரோ,

ஹொங்கொங் டொலர், இந்திய ரூபாய், யப்பானிய யென், நியுசிலாந்து டொலர், நோர்வே குறோணர், ஸ்டேர்லிங் பவுண், சிங்கப்பூர் டொலர், சுவிடன் குறோணர், சுவிஸ் பிராங்க்,

தாய்லாந்து பாத், ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகியவையே அவையாகும்.

பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக வெளிநாட்டு நாணயங்களை அங்கீகரிப்பதன் முக்கிய நோக்கம் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதாகும்.

மேலும், இலங்கைக்கான அதிக சுற்றுலா வழங்கி நாடாக தொடர்ந்தும் இந்தியா விளங்குவதனால் வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களுக்கு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இந்திய ரூபாவை அங்கீகரிப்பது இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக வசதிகளை வழங்கும்.

பெயர்குறிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாவினை அங்கீகரித்தமையானது உள்நாட்டு கொடுப்பனவுக்கு தீர்ப்பனவுக்கு இலங்கையில் இந்திய ரூபாவை சட்ட பூர்வமான நாணயமாக

**சி றியளவிலான வர்த்தகர்களுக்கு விசேடமாக இந்தியன் ரூபா தொடர்புபட்ட சீரான வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல் உள்ளடங்கலாக இலங்கைக்கு பல அனுகூலங்களைக் கொண்டுவரும் என்று மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது**

ஏற்படுத்தியதாகாது. இலங்கையில் வதிபவர்களுக்கிடையில் அல்லது அவர்கள் மத்தியில் நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல் இலங்கையின் சட்டபூர்வ நாணயமாகவிருக்கின்ற இலங்கை ரூபாயிலேயே இருத்தல் வேண்டும்.

அதற்கமைய, இந்திய ரூபாய் தொடர்பில் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்ற தவறான கூற்றுக்களால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என இலங்கை மத்திய வங்கி கோருகின்றது.

குறிப்பாக இரு நாடுகளுக்குமிடையில் ஏற்கனவே காணப்படுகின்ற வணிக உறவுகளை ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கி இலங்கையில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இந்திய ரூபாவை அங்கீகரிப்பதற்கான இலங்கை மத்திய வங்கியின் விருப்பத்தை இந்திய நாணய ஆணையமாகிய இந்திய றிசேர்வ் வங்கிக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவித்தது.

அதற்கமைய, இந்திய றிசேர்வ் வங்கியின் ஒப்புதலுடன் 2022 ஓகஸ்ட்டில் இலங்கையில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக இந்திய ரூபாய் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இலங்கையில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக இந்திய ரூபாயின் பாவனையானது இந்திய றிசேர்வ் வங்கியின் எல்லாவிதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாகும்.

பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இந்திய ரூபாயை அங்கீகரிப்பது வர்த்தக் கொடுக்கல்வாங்கல்களுக்காக முறைசாரா வழிகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக வங்கித்தொழில் வழிகளை பயன்படுத்துவதற்கு வர்த்தகர்களை ஊக்குவித்து, இந்திய ரூபாயை ஐ.அ.டொலராகவும் ஐ.அ.டொலரை இலங்கை ரூபாவாகவும், மறுதலையாகவும் செய்யப்படும் இரட்டை மாற்றுதலுடன் இணைந்த மேலதிக கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைத்து, சிறியளவிலான வர்த்தகர்களுக்கு விசேடமாக இந்தியன் ரூபா தொடர்புபட்ட சீரான வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல் உள்ளடங்கலாக இலங்கைக்கு பல அனுகூலங்களைக் கொண்டுவரும் என்று மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது.

## உமாராவை விசாரணைக்கு அழைத்தது அமைச்சு

இந்த சம்பவம் தொடர்பில் குறித்த புலனாய்வு குழுவினரால், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிகழ்ச்சி முகாமையாளரிடம் புதன்கிழமை (02) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் ஆரம்ப விழாவின் போது தேசிய கீதத்த்த திரிபுபடுத்தி உமாரா சின்ஹவன்ச பாடியமை குறித்து சமூக ஊடகங்களில் வீடியோ பரவியது. தேசிய கீதம் திரிபுடுத்தப்பட்டமை குறித்துல் விசேட விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த 31ஆம் திகதி அமைச்சின் செயலாளர் கே.டி.என். ரஞ்சித் அசோகவுக்கு பணிப்புரை விடுத்ததற்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மலையக மாணவர்களுக்கு தமிழ் நாட்டின் உதவிகள்

தமிழக மாநில அரசின் தொழில்நுட்பவியல் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடியே வேளையிலேயே அவர் இவ்வாறு பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள மலையகம் - 200 நிகழ்வு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மலையகத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு விசேடமாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தொடர்பான கற்கைநெறிகளுக்கான உதவிகள் பெறுவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## கண்பார்வை பாதிக்கப்பட்ட...

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர்.ஆர்.எம்.எஸ். கே.ரட்ணாயக்கநுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டொக்டர் மகேந்திர செனவிரத்ன உட்பட்ட குழுவினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட 18 பேருக்கு இந்த விசாரணைகளில் கலந்து கொள்ளுமாறு அறிவித்திருந்த பொழுதிலும் 16 பேர் மாத்திரமே கலந்து கொண்டனர்.

நடந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது அவர்களுடைய குடும்ப விவரம் வருமானம் உட்பட அனைத்து விடயங்களும் கேட்டறியப்பட்டு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை பாதிக்கப்பட்டவர்களிடம் வாசித்து தெளிவுபடுத்திய பின்பு அவர்களிடம் கையொப்பமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசேட வைத்தியர்கள் மூலமாக விரிவான கண் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டார்கள். அந்த வைத்திய அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர்.ஆர். எம்.எஸ்.கே.ரட்ணாயக்க, "நாம் இந்த அறிக்கையை அமைச்சருக்கும் அதே போல பாராளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் சமர்ப்பிப்போம். அரசாங்கம் எவ்வாறான முடிவுகள் எடுக்கின்றார்களோ அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் "எங்களிடம் அறிக்கை பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இதில் ஏதும் நடக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. இதுவும் ஒரு கண்துடைப்பே. இதன் மூலம் நாங்கள் எங்களுடைய கண் பார்வையை இழந்தது மட்டுமன்றி தற்பொழுது அதற்காக பொருளாதார ரீதியிலும் பல பாதிப்புகளை சந்தித்து வருகின்றோம்" என்றனர்.

## இறக்குமதியை நிறுத்த...

நாட்டில் பால் கைத்தொழில் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், உள்ளூர் பால் உற்பத்தி மீண்டும் அதிகரித்துள்ளதாக இதன்போது அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த ஆறு மாதங்களில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை பால் உற்பத்தியை 2,599,617 லீற்றராகவும், மில்கோ நிறுவனம் 19,152,766 லீற்றராகவும் அதிகரித்துள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 30 வீத அதிகரிப்பு என நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாட்டில் திரவப் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால் பால் மா இறக்குமதியை நிறுத்துமாறு குறித்த அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. நாட்டில் திரவ பால் உற்பத்தி அதிகரிப்பு தொடர்பில் கூடிய விரைவில் அறிக்கை தயாரித்து தன்னிடம் சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

## ருஸ்திக்குக்கு மரணத்துக்கு...

ரிதிதென்ன பிரதான வீதியிலிருந்து சுமார் ஆறு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புதிய கிராமத்துக்கு அருகிலுள்ள குளம் ஒன்றிலேயே மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

சனநடமாட்டம் அதிகமாக காணப்படும் குறித்த பகுதி வீதிகளால் கனரக வாகனம் வேகமாக செல்வதால் பாரிய அச்சத்தில் தாம் வாழ்ந்து வருவதாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தின்போது தெரிவித்தனர்.

மண்ணை ஏற்றிக் கொண்டு செல்ல வேறு பாதைகள் உள்ள போதும் தங்களது அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி குடியிருப்பு வீதிகளால் வாகனங்கள் செல்வதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மண் அகழ்வு நடவடிக்கையின் போது மரணமான சிறுவனுக்கு நீதி கோரியும் வாகனங்கள் வேறு வீதிகளால் செல்ல வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தும் மரணமடைந்த சிறுவனின் பெற்றோர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## "எனக்கு தலைவர்...

மேலும் தெரிவிக்கையில், "ரணில் விக்ரமசிங்கவையும் சஜித் பிரேமதாசவையும் இணைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. எல்லாவற்றையும் ஊடகங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

சஜித் பிரேமதாச எங்கள் கூட்டணிக்கே தலைவரொழிய சஜித் பிரேமதாச எனக்கு தலைவர் அல்ல" என்றார்.

## விமல் சொக்கநாதன்...

மூத்த அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதின் 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூலின் அறிமுக விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது, அந்நிகழ்வினை விமல் சொக்கநாதன் தலைமையேற்று நடத்தியதோடு, நூல் வெளியீட்டிலும் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

# சஜித்துக்கு பொறாமை

கம்பஹா உடுகம்பலாவில் உள்ள அவரது அலுவலகத்தில் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் புதன்கிழமை (02) உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது, "நமது பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு இரண்டு முக்கிய காரணங்கள் கோவிட் மற்றும் போராட்டம். எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ரசாங்கத்திற்கு எதிர்க்கட்சியின் ஆதரவு தேவை. நமது எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் கூச்சல் மட்டுமே போடுகிறார். அவர் விரிவுரை வழங்குவதில் வல்லவர்.

**நாட்டுக்கு சில டொலர்கள் கிடைக்கின்றன. இப்போது கடந்த காலத்தைப் பார்ப்பதில் அர்த்தமில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மோசமானவர் அல்ல**

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகவும் பொறாமையுடன் பார்க்கின்றார்.

ஜனாதிபதி நாட்டுக்காக கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கும் வேளையில் எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு கோஷமிடுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது மாத்திரமே நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையுமா என எதிர்க்கட்சிகளிடம் கேள்வி எழுப்புகின்றோம். எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சி என்ற ஒற்றைக் கருத்துக்கு வர முடியாது. ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கல்வியறிவு அற்றவராக இருப்பது ஒரு அரசாங்கத்திற்கு பாதகம். அநுரகுமார பற்றியும் பேச ஒன்றுமில்லை. அவருக்கு பேச்சு மட்டுமே. வேலை இல்லை அதனால்தான் அந்த மக்களைப் பற்றி பேசுவது நேரத்தை வீணடிப்பதாகும்.

ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளார். 10 நாட்களில், உலகின் சக்திவாய்ந்த 4 நாடுகளின் தலைவர்கள் அவரை சந்தித்தனர். சமீபகால வரலாற்றில் எந்த அரச தலைவருக்கும் இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்ததில்லை.

மேலும், சர்வதேச சமூகத்தில் இலங்கை

**ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் நாங்கள் எங்கள் துருப்புச் சீட்டை வைப்போம். அதுவரை மற்றவர்களின் விளையாட்டுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்**

மீது அதிக நம்பிக்கை உள்ளது. எமது நாடு சர்வதேச சமூகத்திடம் இருந்து ஓரங்கட்டப்பட்ட நாடாகும். கடந்த காலங்களில் சில நாடுகள் எமது நாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டாம் என தமது பிரஜைகளுக்கு அறிவித்திருந்தன. இப்போது அப்படியொரு நிலை இல்லை.

மீண்டும் நம் நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியுள்ளனர். சுற்றுலாப் பயணிகள் வரும்போது, அதையே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் கைகள் வளமாகின்றன. நாட்டுக்கு சில டொலர்கள் கிடைக்கின்றன. இப்போது கடந்த காலத்தைப் பார்ப்பதில் அர்த்தமில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மோசமானவர் அல்ல. அவர் செய்த செயல்கள் நல்லதா கெட்டதா என்று எதிர்கால சந்ததியினரால் தீர்மானிக்கப்படும்.

அடுத்த வருடம் எப்படியும் தேர்தல் வருடம். அதனால்தான் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள் நிறைந்திருக்கிறார்கள். சஜித் பிரேமதாச, அனுரகுமார, எம்மை விட்டு பிரிந்து சென்றவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள், ஜனாதிபதி வேட்பாளர் வரிசையில் வருகின்றனர். ஆனால், இந்த நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட மொட்டுக் கட்சியான நாங்கள் இன்னும் அமைதியாக இருக்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் நாங்கள் எங்கள் துருப்புச் சீட்டை வைப்போம். அதுவரை மற்றவர்களின் விளையாட்டுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜனாதிபதித் தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் என எதுவாக இருந்தாலும், மக்கள் வாக்குகளால் அதிக வெற்றி பெறுவது மொட்டுதான்" என்றார்.

துல்ஹிரிய விபத்தில்

# பெண் பலி; 10 பேர் காயம்

வரக்காபொல துல்ஹிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். சுமார் 10 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் காயமடைந்தவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பேபுஸ்ஸவிலிருந்து அலவ்வ நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும், எதிர்திசையில் பயணித்த பாரவூர்தியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பேருந்தில் பயணித்தவர்களில் சுமார் 10 பேர் காயமடைந்து வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தீர்த்தமாடிய மாவடிக் கந்தன்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின், தீர்த்தோற்சவம் புதன்கிழமை (02) புதன்கிழமை உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ க.சி. லோகநாதக் குருக்கள் தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா கோசத்துடன் அலைஅலையாய் திரண்டு, நிறைய காவடிகள் சகிதம் ஊர்வலமாக வந்தவேளை அலைகடலில் மாவடிக்கந்தன் தீர்த்தமாடினார்.

காலை 6.30 மணியளவில் ஆலயத்தில் விஷேட பூசையுடன் பிள்ளையார் மற்றும் வள்ளி தெய்வானை சகிதம் புறப்பட்ட முருகப் பெருமான் நண்பகல் 12 மணியளவில் வங்கக்கடலில் தீர்த்தமாடினார்.


தந்தையரை இழந்தவர்கள் பிதிர்க்கடன் செலுத்தி தீர்த்தமாடினர். கூடவே ஆயிரக்கணக்கான அடியார்களும் தீர்த்தமாடினர்.

கடந்த மூன்று வருடங்களின் பின்னர் மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடைபெற்றது. அதன்பின் இடம்பெறும் முதலாவது ஆடிவேல்விழா உற்சவத்தின் கொடியேற்றம் செவ்வாய்க்கிழமை (18) சிறப்பாக நடைபெற்று, ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முன்னிலையில் உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ க.ச.லோகநாதக்குருக்கள் தலைமையில் உற்சவ திருவிழாக்கள் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஒகஸ்ட் 02ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைந்தது.

■ வி.ரி.சகாதேவராஜா























## சாய்ந்தமருதில் போதைக்கு எதிரான பேரணி



■ நூருல் ஹுதா உமர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆலோசனைக்கிணங்க கல்முனை வலயக்கல்வி அலுவலக சிபாரிசின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் போதைப்பாவனைக்கு எதிரான வீதி ஊர்வலமும், போதைக்கு எதிரான பிரச்சாரமும், துண்டுப்பிரசுர விநியோகமும் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இன்று சாய்ந்தமருது பிரதான வீதியில் நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வாகனத்தில் போதைப்பவனைக்கு எதிரான பிரச்சாரங்களுடன் பாடசாலை முன்றலில் ஆரம்பித்த இந்த பேரணி சாய்ந்தமருது பொதுச்சந்தை வரை சென்று மீண்டும் மாளிகா சந்திவரை தொடர்ந்து மீளவும் பாடசாலை வளாகத்தை வந்தடைந்தது.

இந்த பேரணியின் போது போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களை கலந்துகொண்ட அதிதிகள் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கி வைத்தனர்.

இந்த பேரணியில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம். றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், உதவிக்கல்வி பணிப்பாளருமான எம். என்.ஏ.மலீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். சீ.எம்.மாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், சிவில் அமைப்புக்களின் பிரமுகர்கள், பாடசாலை முகாமைத்துவ குழுவினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டதுடன் மாணவர்கள் சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டம் எடுத்தார் மனைவி: ஓட்டோவுக்கு தீ வைத்தார் கணவன்

தன்னுடைய மனைவி, அவருடைய கள்ளக்காதலுடன் ஓட்டோவில் இருப்பதைக் கண்ட கணவன், அந்த ஓட்டோவை தீ வைத்து கொளுத்திய சம்பவம் ஹொரனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில், ஓட்டோவுக்கு தீ வைத்த நபர், கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவருடைய மனைவி, ஹொரனை பிரதேசத்தில் உள்ள பிரபல ஆடை தொழிற்சாலையில் பணியாற்றுகின்றார்.

இன்று(02) கடமைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து காலை வெளியேறியுள்ளார்.

எனினும், தன்னுடைய மனைவி மற்றுமொருவருடன் ஓட்டோவில் இருப்பதாக கணவனுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில், அந்த ஓட்டோவை நோக்கி கணவன் ஓடியுள்ளார்.

இதனை கண்ட அந்த காதல் ஜோடி, ஓட்டோவை அவ்விடத்திலேயே கைவிட்டுவிட்டு தப்பியோடிவிட்டது.

ஆத்திரமடைந்த கணவன், ஓட்டோவுக்கு தீவைத்து கொளுத்தியுள்ளார். இந்த தீயால் அந்த ஓட்டோ முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

## அடையாளம் காட்டவும்

■ செந்தூரன் பிரதீபன்

சேந்தாங்குளம் கடற்கரை பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட இனந்தெரியாதவரின் சடலமானது தற்போது யாழ்ப்பாண வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது வரைக்கும் சடலம் அடையாளம் காணப்படவில்லை. சடலம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு 0718591319 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

## கடமையை பொறுப்பேற்றார்



■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தின் போறதீவுபற்று - வெல்லாவெளி பிரதேச செயலாளராக எஸ். ரங்கநாதன் புதன்கிழமை (02) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர அதிகாரியான இவர் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 6 ஆண்டுகள் அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளராக கடமையாற்றிய நிலையில் பொது நிருவாக இடமாற்ற கடிதத்திற்கு அமைய போறதீவுபற்று புதிய பிரதேச செயலாளராக கடமைப் பொறுப்பேற்றுள்ளார்.

1977ம் ஆண்டு பிறந்த எஸ். ரங்கநாதன் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பட்டதாரியாவார். 2006 ம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தார். இவர் இதற்கு முன்னர் ஓட்டமாவடி, செங்கலடி, களுவான்சிக்குடி ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிரதேச செயலாளராகவும் மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில் நாவிதன்வெளி மற்றும் போரதீவுபற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## இத்தாலிக்கு தப்ப முயன்ற யாழ். தம்பதி கைது

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதி இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (010 மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம். சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இந்தத் தம்பதிகளில் இளைஞனுக்கு 27 வயது.

யுவதிக்க 28 வயது.

அன்று மாலை 05.00 மணியளவில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபிக்கு புறப்பட்ட எதிஹாட் எயார்லைன்ஸின் ரிவை-279 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் மீதான சந்தேகத்தின் அடிப்படையில் குடிவரவு. குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு. அவர்கள் கொண்டு வந்த பயணப்பொதிகளை சோதனையிட்ட போது பொய்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச்சீட்டுகளும் இந்த இளைஞனிடம் இருந்த போலி விசாவும் கண்டுபிடிக்கப்பட்டது.

# பொதுவான விடயங்களில் ஓரணியில் நிற்பதே பலமாகும்

பலமான எதிரணி ஒன்று இருக்க வேண்டுமாயின் அவ்வணிக்குள் ஒன்றுமை இருக்கவேண்டும். இல்லையேல், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் மக்களுக்கு தீங்கிழைக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக, ஓரணியில் திரண்டு குரல்கொடுக்க முடியாது. அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின் அது அரசாங்கத்துக்கே சாதகமானதாக அமையும்.

ஆட்சிபீடமேறும் அரசாங்கங்கள் எதிரணிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி பிரித்தாளும் கொள்கையையே முன்னெடுக்கும். இதனூடாக தமது சாதகமானவற்றை முன்னெடுத்துக்கொள்ளும். சட்டமூலமொன்றை நிறைவேற்றிக்கொள்ள ஆதரவாக வாக்களிக்கவேண்டும். அதேபோல, அதிலிருந்து விலகி நிற்பதும், ஆதரவுக்கு சமமானதாகும் என்பதே உண்மையாகும். தற்போதைய அரசாங்கத்தில் பிரித்தாளும் கொள்கை மிகவும் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதே உண்மையாகும். ஓரணியில் திரண்டிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, பல அணிகளாக பிரிந்து நிற்கின்றது. ஐக்கிய மக்கள் சக்திக்குள் பல அணிகள் இருப்பதால், சில தீர்மானங்களை ஏகமானதாக எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளையும் சிறுபான்மை இன கட்சிகளையும் ஓரணிக்குள் கொண்டு வருவது குதிரை கொம்பாகவே இருக்கிறது. இதனால்தான், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஓங்கி குரல் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அரசியல் இராஜதந்திரி என்பர், அவரிடம் குழுவாக பேச்சுவார்த்தைக்குச் சென்றால், இரண்டொரு வாரங்களுக்குள் அவ்வணிக்குள் எவ்வாறேனும் பிளவு ஏற்பட்டுவிடும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது. அந்தளவுக்கு பிரித்தாளும் திறனை அவர் கொண்டிருக்கின்றார்.

ஒவ்வொரு கட்சிகளுக்கும் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கும். அதன் பாதையில் ஓரணியில் திரள்வது என்பது இயலாத காரியமாகும். அவ்வாறு இணைந்துவிட்டால், தங்களுடைய கட்சியின் கொள்கைக்கு அமைவாக நிறுவப்பட்ட வாக்கு வங்கியை காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். தேசிய பாதுகாப்பு, இனம், தாய்நாடு, நாடு பிளவுபடும் என்றெல்லாம் கூக்குரல் எழுப்புவோர், ஜனநாயக ரீதியிலான தீர்வுக்கு எப்போதுமே ஒத்துழைக்கமாட்டார்கள் என்பது உண்மையாகும். எப்போதுமே இனவாதத்தை கக்கிக்கொண்டு இருப்பவர்களால், நாட்டுக்கு நன்மையில்லை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

பொருளாதார ரீதியில் படுகுழிக்குள் விழுந்த நாடு, கொஞ்சம், கொஞ்சமாக தலை நிமிர்ந்து கொண்டிருக்கின்றது. எனினும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை, ஐக்கிய அமெரிக்க டொலர், இலங்கை ரூபாயை மிதித்துக் கொண்டிருக்கின்றது. அரிசி தட்டுப்பாடு, வரட்சி, வறுமை தொடர்பில், ஊகங்கள் வெளிவருகின்றன. இவையெல்லாம் உண்மையாகிவிட்டால் நிலைமை இன்னும் மோசமடையும்.

நாடு, மக்களின் நலன், எதிர்காலம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, பொதுவான பிரச்சினைகளின் போது, ஓரணியில் ஒன்றுதிரள்வதே நாட்டுக்கும் மக்களுக்கு நன்மையாகும். பிரிந்து இருப்பதன் ஊடாக, இன்னும் பல வருடங்களுக்கு நாடு பின்னோக்கி சென்றுவிடும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அரசியல் தீர்வு விடயத்திலும் சிறுபான்மை இன கட்சிகள் ஓரணியில் திரண்டு குரல் கொடுப்பது, மிக பலமான அழுத்தமாக இருக்கும். அதனை தவறவிட்டால், மிகநெடுந்தூரம் நெருக்கடிக்குள்ளே பயணிக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ரணிலை பாதுகாக்கும் இந்தியா




புருஜோத்தமன் தங்கமயில்


இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத்தொடர்பைப் பேணும் வகையில் பாலம் அமைக்கப்படுவது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்திருக்கிறார். ‘தி ஹிந்து’ பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய சில தினங்களுக்குள்ளேயே, மிலிந்த மொரகொட இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத்தொடர்பை ஏற்படுத்துவதைத் குறித்து பேசியுள்ளமை கவனம் பெறுகின்றது.

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர், அவ்வப்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத்தொடர்பை ஏற்படுத்துவது தொடர்பில் ஊடக வெளியில் பேசப்பட்டு வந்திருக்கின்றது. அதுபோல, யாழ்ப்பாணம் தமிழ்நாட்டுக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து தொடர்பாகவும் இரு நாடுகளுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. அதன் விளைவாக, எதிர்வரும் நாட்களில் யாழ்ப்பாணத்திற்கும் காரைக்காலுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே, பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமானப் போக்குவரத்தும் நடைபெற்று வருகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிலத்தொடர்பை ஏற்படுத்துவது தொடர்பில் இந்தியாவோ, இலங்கையோ கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் அதிக கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கு இரு நாடுகளும், தமிழ்நாட்டுக்கும் இலங்கையின் வடக்குப் பகுதிக்குமான நிலத்தொடர்பு என்பது, இரு நாடுகளுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்கிற உணர்நிலை காரணமாக இருந்தது. ஆனால், இன்றைக்கு இந்தியாவின் பெரு முதலாளிகள் தமிழ்நாட்டிலும் மன்னார் உள்ளிட்ட வடக்கு கிழக்கு இலங்கையிலும் பெரு முதலீடுகளைச் செய்திருக்கின்றனர். அதனால், அவர்களின் தொழில் வளர்ச்சி தொடர்பில் இரு நாடுகளும் இப்போது அக்கறை கொள்கின்றன. நிலத்தொடர்பை ஏற்படுத்தி, பயணச் செலவு, நேரச் செலவு உள்ளிட்ட தொழிற்துறை உற்பத்திக்கான பாதக அம்சங்களை நீக்குவதற்கான நோக்கங்களை இரு நாடுகளும் கருத்தில் கொண்டிருக்கின்றன. அத்தோடு, கடலுக்கு அடியிலான கேபிள் இணைப்புக்கள், மின்சார பகிர்வு பற்றியெல்லாம் உரையாடல்கள் ஆரம்பித்திருக்கின்றன. அதனை, மிலிந்த மொரகொடவின் ஹிந்து செவ்வியில் புரிந்து கொள்ள முடியும்.

அதிக நேரங்களில் ஆட்சியாளர்கள் மக்களைக் காட்டிலும் பெரு முதலாளிகளுக்காகவே வேலை செய்திருக்கிறார்கள். இப்போதும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நிலத்தொடர்பு பாலம் அமைப்பது தொடர்பிலான உரையாடல் அதன் நோக்கிலேயே மேலெழுந்திருக்கின்றது. அதிலும், கொழும்பு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற நிலையில், அதனைப் பிடித்துக் கொண்டு இந்தியா, தன்னுடைய ஆளுமையைத் தெளிவாக செலுத்துகின்றது. ஏற்கனவே, சீனாவிடம் கடன்பட்டு அல்லற்படும் இலங்கையை, கரையேற்றுவதற்கு இந்தியாவும் மேற்கு நாடுகளும் முயன்று வருகின்றன. அண்மையில் கூட, இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான திரும்பப் பெறும் திகதிகளை மாற்றி அமைப்பதற்கான ஒப்பந்தங்களில் சீனா கைச்சாத்திட வேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டிருக்கின்றார். இந்திய மாநிலங்கள், ஜீ.எஸ்.டி வரிப் பங்கீட்டினை மத்திய நிதி அமைச்சு ஒழுங்காக செய்வதில்லை என்று தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில், அதனையெல்லாம் கண்டு கொள்ளாமல், இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பற்றி, நிர்மலா சீதாராமன் அக்கறை கொள்வது என்பது முக்கியமானது.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல், இந்தியா தன்னை புதுடில்லிக்கு அழைத்து அங்கீகரிக்க வேண்டும் என்று காத்திருந்தார். ஆனால், ஒரு வருடத்துக்குப் பின்னர் கடந்த மாதமே அவர் டில்லிக்கு அழைக்கப்பட்டார். மோடியுடனான சந்திப்பு நடந்தது. இந்த இடைப்பட்ட ஒருவருடம் என்பது, இந்தியா ரணிலை கண்காணித்து எடைபோடுவதற்கான காலமாக பார்க்கப்பட்டதாக கொள்ளலாம். அவர், சீனாவையும், ராஜபக்ஷக்களையும் எப்படிக் கையாள்கிறார். தங்களுக்கான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறாரா என்று இந்தியா கணக்குப் போட்டது. இப்போது, ரணில் மீது பெருமளவு திருப்தி கொண்டிருக்கின்ற இந்தியா, அவரை தொடர்ந்து இலங்கையின் ஆட்சித் தலைவராக பேணும் முடிவுகளோடு இருப்பதாக கருதலாம். ஏனெனில், ரணிலோடு முறுக்கிக் கொண்டு நிற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை இந்தியா சரியாக்கும் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றது. ரணில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, தன்னுடைய பதவியை யாரும் கேள்விக்குள்ளாக்காத வகையில் உறுதிப்படுத்தும் நோக்கோடு இருக்கிறார். அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்த நினைக்கிறார். அந்தத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்றால், ரணிலுக்கு தமிழ் மக்களின் வாக்கு சிந்தாமல் சிதறாமல் கிடைப்பது அவசியமானது. இன்று இருக்கும் நிலையில், ரணில் ராஜபக்ஷக்களின் பினாமி என்கிற உணர்நிலை நாட்டு மக்களிடம் உண்டு. அப்படியான நிலையில், தமிழ் மக்கள் ரணிலை ஆதரிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு. அதனால், அதனை மாற்றி, தமிழ் மக்களின் வாக்குகளை ரணிலுக்கு மாற்றிவிடுவதில் இந்தியா கவனம் செலுத்துகின்றது. அதுவே, அரசியலமைப்பின் 13வது திருத்தம் பற்றிய பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணமாகும்.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கிய 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதனையே தமிழ் மக்களுக்கான தீர்வு என்று தீர்ப்பு எழுத இந்தியா 35 ஆண்டுகளாக முனைந்து வருகின்றது. தென் இலங்கையைப் பொறுத்தளவில், 13வது திருத்தத்தையே அது நாட்டை பிளக்கும் ஏற்பாடாக பார்க்கின்றது. அப்படிப்பட்ட நிலையில், காணி அதிகாரத்தை முழுமையாக வழங்கி 13வது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு தயார் என்று ரணில் அண்மையான நாட்களில் கூறி வருகின்றார். மாகாண சபைத் தேர்தலை நடத்தாது, 13வது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் பேசுவது அர்த்தமற்றது என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாதம். மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாது, 13வது திருத்த அமுலாக்கம் என்பது எப்படி சாத்தியம் என்பது, தமிழ்க் கட்சிகளின் கேள்வி. மாகாண ஆளுநர்களிடம் அதிகாரங்களைப் பகிர முடியாது. ஏனெனில், ஆளுநர் என்பவர் மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதி. அப்படியான சூழலில் மாகாண அதிகாரங்களைப் பகிர்ந்து, நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண அரசாங்கம் இயங்கியாக வேண்டும். அதற்கு, மாகாண சபைத் தேர்தல் அவசியம்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசிய இந்தியத் தூதுவர் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குமான அழுத்தத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரணிலுடனான சந்திப்பின் போது வலியுறுத்தியிருப்பதாக கூறியிருக்கின்றார். மோடிக்கும் ரணிலுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பதை, தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அழைத்து, இந்தியத் தூதுவர் விளக்கமளிக்க வேண்டிய தேவை என்பது, ரணிலின் ஆட்சி நீடிப்புக்கு தமிழ் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற நோக்கிலானது. அதனை உணர்ந்து கொண்டுதான், கடந்த திங்கட்கிழமை, அதாவது, இந்தியத் தூதுவருடனான சந்திப்புக்கு முதல் நாள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அதில், 13வது திருத்த அமுலாக்கத்தை ஒரு படிநிலையாகவும், மாகாண சபைத் தேர்தல்களின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளதோடு, தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது இணைந்த வடக்கு கிழக்கைக் கொண்ட அதிகார பரவலாக்கமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வீழ்ந்து போயிருக்கின்ற நாட்டின் பொருளாதாரம் மீள் எழுச்சி காண்பது என்பது அவசியமானது. அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை. ஆனால், ஒரு தரப்பு மக்களின் உரிமைகளும் உரித்துகளும் அடகுவைக்கப்பட்டு பொருளாதார முன்னேற்றம் என்ற அடையாளம் என்பது ஏற்புடையது அல்ல. இப்போது, ரணிலை தக்க வைப்பதற்காக 13வது திருத்தம் என்ற குறைப்பிரசவத்தை தமிழ் மக்களின் தலையில் ஏற்றி வைக்க இந்தியா முயற்சிப்பது அறமற்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலத்தொடர்பை ஏற்படுத்தி, பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவது குறித்து இந்தப் பத்தியாளருக்கு ஆதரவான கருத்து உண்டு. குறிப்பாக, நலிந்து போயிருக்கின்ற வடக்கு கிழக்கு மக்களின் சிறுகுடிசைக் கைத்தொழில்களின் பெருஞ்சந்தையாக தமிழ்நாடு வழி, இந்தியா விளங்கும். அதுபோல, சமய சுற்றுலா வளர்ச்சி தொடங்கி, பெருநிறுவனங்களின் வருகையும் தொழில் வாய்ப்பும் அதிகரிக்கும். அது, ஒட்டுமொத்தமாக நாட்டுக்கு நன்மையே. ஆனால், அதனை, இந்தியாவை ஆளும் ஆட்சியாளர்களின் நண்பர்களாக பெரு முதலாளிகளின் நலனை மட்டும் முன்னிறுத்தி நிகழ்த்தும் போதுதான் அச்சப்பட வேண்டியிருக்கின்றது.

தென் இலங்கையைப் பொறுத்தளவில் எப்போதுமே, தமிழ் நாடும் இலங்கையின் வடக்கு கிழக்கும் நிலத்தொடர்பைப் பேணுவதை அச்சுறுத்தலாக உணர்ந்து வந்திருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகி விட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகள் கவலை

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பகுதியில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலங்களை விட இம்முறை ஒரு சில பகுதிகளில் நல்ல விளைச்சல்கள் இருந்த போதிலும் நெல்லுக்கு நிர்ணய விலை இல்லாததால் விவசாயிகள் இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர் .

விவசாயிகள் வேர்வை சிந்தி கஷ்டப்பட்டு வேளாண்மை அறுவடைகள் நடைபெற்று கொண்டிருக்கின்ற வேளையில் நெல் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபாய்களை செலவு செய்து வேளாண்மை செய்கை மேற்கொண்ட நிலையில் இறுதியில் நெல்லுக்கான விலை இல்லாததால் தாம் பெரும் கடனாளியாக மாறுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசு இதனை கருத்தில் கொண்டு நிர்ணய விலையை பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப்.முபாரக்






இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையை

# விரிவுபடுத்துவதில் ஆர்வம்




நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு சீனச் சந்தையைத் திறப்பதில் சீனாவின் கவனம் குவிந்துள்ளது. சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய டிஜிட்டல் பொருளாதார உச்சி மாநாட்டில் இலங்கை உச்சிமாநாட்டின் பிரதிநிதிகள் வெளிப்படுத்திய கருத்துக்களைக் கருத்தில் கொண்டேஇந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தகவல் தொழிநுட்பத் துறையில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து சீனப் பிரதிநிதிகள் தங்களது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். இந்த நான்கு நாள் மாநாட்டின் கருப்பொருள் "டிஜிட்டலைசேஷன் வளர்ச்சியை வழிநடத்துகிறது, நுண்ணறிவு எதிர்காலத்தை வழிநடத்துகிறது"என்பதாகும்.

இந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.மகேஷ் பெரேரா மற்றும் பிரதி பிரதான டிஜிட்டல் பொருளாதார அதிகாரி திரு.சசீந்திர சமரரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் உரையாற்றிய திரு. மகேஷ் பெரேரா, டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 2030 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் உத்திகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி உச்சத்தில் இருந்த வேளையில் கடந்த காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் உரிமம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்ததுடன் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பலன்களை மக்கள் பெற்ற வாய்ப்புகளில் இதுவும் ஒன்று என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாநாடு இலங்கையில் டிஜிட்டல் நிதித்துறையை மேம்படுத்துவதற்கும் டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் ஒரு தூண்டுதலாகஇருந்ததுடன், மேலும் இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறை சீன சந்தையில் நுழைவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு வலியுறுத்தப்பட்டது.

உலகின் நகரங்களில் கவனம் செலுத்தி டிஜிட்டல் பொருளாதாரத்தை உயர்த்துவது, புதுமையான தொழில்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது, 5G தொழில்நுட்பம் போன்ற வேகமாக வளரும் டிஜிட்டல் துறைகளில் அதிக கவனம் செலுத்துவது ஆகியவை நேர்மறையான மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்று இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.



இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள டிஜிட்டல் முதலீட்டு மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்புக்கு சீன மாநாட்டுப் பிரதிநிதிகளும் நல்ல முறையில்பதிலளித்துள்ளமை குறிப்பிட்ட தக்கது.

சீனா, இலங்கை, ஹாங்காங், மலேசியா, நார்வே, லாவோஸ், சிங்கப்பூர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஸ்லோவேனியா போன்ற பல நாடுகளின் பிரதிநிதிகள், ஆராய்ச்சி, கல்வி, தொழில், அரசியல், எனப் பல துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திஇந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

## ஆடிச் செவ்வாயை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள்





மூன்றாவது ஆடிச் செவ்வாயை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சிவ ஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் செவ்வாய்க்கிழமை (1) நடைப்பெற்றன.

பீ.கேதீஸ்



## பாராட்டு விழா





கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்தில் கடந்த 10 வருடகாலமாக பிரதி அதிபராக கடமையாற்றி 31 வருடகால சேவைக் காலத்தினை பூர்த்தி செய்து கடந்த மாதம் ஓய்வு பெற்ற ஏ.எம். அப்துல் நிஸாருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை நலன்புரிக் குழுவினால் ஒழுங்கு செய்து பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், விசேட மலர் வெளியீடும் நடைபெற்றதுடன் ஓய்வு பெற்ற ஆசிரியர் நிஸார், பாடசாலை ஆரம்பக் கல்வி மாணவர்கள் பயனடையும் வண்ணம் மாணவர்களுக்காக அடிப்படை தமிழ் அறிவுகளை உள்ளடக்கிய " அமுதமொழி " என்ற நூலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நூருல் ஹுதா உமர்

## ஆடி மகோற்சவம்





பசறை, கோணக்கலை குரூப், காவத்தை டிவிசன் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஆடி மகோற்சவத்தின் இரத பவனி விழா மிக சிறப்பாக நடைபெற்றதுடன் விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமாரும் கலந்து கொண்டார்.

## பெட்மின்டன் ஆடுகளம் அரங்கு திறந்து வைப்பு



அல்ரா நிறுவனத்தினால் 17 மில்லியன் ரூபாய் செலவில் அல்ரா பெட்மின்டன் ஆடுகளம் அரங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கை மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உதித்லியனகே, செவ்வாய்க்கிழமை (01) திறந்து வைத்தார்.இதன் போது இந்த புதிய பெட்மின்டன் ஆடுகளத்தில் சினேகபூர்வ போட்டிகள் நடைபெற்றன.

இந்த அரங்கானது 3 காபட் கோட்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளதுடன் ஒரே தடவையில் 3 வெவ்வேறு போட்டிகளை நடாத்தக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை தேசிய ரீதியான பெட்மின்டன் போட்டிகளையும் நடாத்துவதற்கு உகந்த வகையில் இலங்கை பெட்மின்டன் சபையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த பெட்மின்டன் அரங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பம்சங்களை கொண்ட அல்ட்றா பெட்மின்டன் கோட் கிழக்கு மாகாணத்தின் முதல்தரம் வாய்ந்த அரங்காக விளையாட்டு ரசிகர்களால் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

எம்.எஸ்.எம். நூர்தீன்





## "கலைச்சுடர்" விருது வழங்கும் விழா








பது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தின் "கலைச்சுடர்" விருது வழங்கும் விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் தலைமையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இப்பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக் கழகங்களுக்கும், கல்வியியல் கல்லூரிகளுக்கும் சென்ற உயர்தர மாணவர்களை கௌரவிக்கும் முகமாக இவ்விருது வழங்கும் விழா நடைபெற்றது .

ராமு தனராஜா

## இளைஞர்களுக்கான 5S பயிற்சிபட்டறை



மனித மேம்பாட்டு அமைப்பு மற்றும் முஸ்லிம் வாலிபர் சங்கம் மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (01) காலை முதல் மாலை வரை இளைஞர்களுக்கான 5S முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி பட்டறை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் மாவடிப்பள்ளி YMMA யின் தலைவருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்றது.

நூருல் ஹுதா உமர





சீனா

# சீனாவில் உலகின் மிகப்பெரிய விண்ட் டர்பைன்



உலகின் மிகப்பெரிய விண்ட் டர்பைனை சீனா இயக்கத் தொடங்கியுள்ளது. இந்த காற்றாலையானது ஜூலை 19 அன்று ஃபுஜியான் மாகாணத்திற்கு அருகிலுள்ள நிறுவனத்தின் கடலோர காற்றாலை பகுதியில் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளதாக சீனா த்ரீ கோர்ஜஸ் கார்ப்பரேஷன் தெரிவித்துள்ளது.

இந்த MySE-16-260 என்ற விண்ட் டர்பைன் 16 மெகாவாட் திறன் கொண்டது. இந்த மெகா டர்பைன் 152 மீட்டர் உயரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இது ஒரு கால்பந்து மைதானத்தின் நீளத்தை விட இரண்டு மடங்கு நீளம் கொண்டுள்ளது. இதில் இருக்கும் ஒவ்வொரு பிளேடும் 123 மீட்டர்கள் மற்றும் 54 டன் எடை கொண்டது.

மேலும், இந்த டர்பைனின் வடிவமைப்பாளரான மிங்யாங் ஸ்மார்ட் எனர்ஜி, இந்த டர்பைன் வினாடிக்கு 79.8 மீட்டர் வரையிலான தீவிர காற்றின் வேகத்தைத் தாங்கும் என்று உறுதியளித்தார். அதன்படி சமீபத்தில், கிழக்கு ஆசியாவில் தலிம் சூறாவளி தாக்கியபோது இந்த டர்பைன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்:

## பி-லவ் கண்டியை வீழ்த்திய
# கோல் டைட்டான்ஸ்



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பி-லவ் கண்டி உடனான போட்டியில் கோல் டைட்டான்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டைட்டான்ஸ், டிம் செய்ஃபேர்ட்டின் 74 (39), ஷகிப் அல் ஹஸனின் 30 (21) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் ஹஸ்னைன் 4-0-26-1, அணித்தலைவர் வனிடு ஹஸரங்க 4-0-27-1, முஜீப் உர் ரஹ்மான் 4-0-25-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர். பதிலுக்கு 181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கண்டி, கசுன் ராஜித (2), றிச்சர்ட் நகரவா (2), லஹிரு சமரக்கோன், ஷகிப் அல் ஹஸன் (2), தப்ரையாஸ் ஷம்சி (2), அகில தனஞ்சயவிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்களையே பெற்று 83 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக செய்ஃபேர்ட் தெரிவானார்.

இந்நிலையில் முன்னதாக நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் தம்புள்ள ஓறா வென்றது.

பெங்களூர்



# காதலியை நண்பர்களுக்கும் விருந்தாக்கிய காதலன் கைது

பெங்களூர் கொடிகேஹள்ளி பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இளம்பெண் ஒருவர் அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். அவருக்கு சமூக வலைத்தளம் மூலம் வாலிபர் ஒருவர் பழக்கமானார். இருவரும் அலைபேசி எண்களை பரிமாறி பேசி வந்துள்ளனர். பின்னர் இருவரும் காதலித்ததாக கூறப்படுகிறது.

அப்போது தனிமையில் சந்தித்து பேசி வந்த நிலையில் அந்த வாலிபர், தனது காதலியான இளம்பெண்ணை ஆபாசமாக புகைப்படங்களும், வீடியோக்களும் எடுத்து பின்னர் அவர் அந்த பெண்ணின் ஆபாச புகைப்படங்கள், வீடியோக்களை காண்பித்து, மிரட்டி பலமுறை பலாத்காரம் செய்துள்ளார். மேலும் அவர் தனது காதலியை தனது நண்பர்கள் சிலருக்கும் விருந்தாக்கி உள்ளார்.

இதுகுறித்து அந்த பெண், கொடிகேஹள்ளி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண்ணின் காதலன் ஜார்ஜ் , அவரது நண்பர்கள் சந்தோஷ் மற்றும் சாஷி ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ளார்.

கொல்கத்தா

# 21 நாள் சிசுவை விற்ற இளம் தாய்

கொல்கத்தாவின் நோனா டங்கா பகுதியில் உள்ள ரயில்வே காலனியை சேர்ந்த ரூபாலி மோண்டல் எனும் இளம் பெண்ணுக்கு கடந்த 21 நாட்களுக்கு முன்பு ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இந்நிலையில் அந்த குழந்தையை ரூபாலி மோண்டல் இன்னொரு பெண்ணுக்கு விற்று விட்டதாக அப்பகுதியை சேர்ந்த ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பேரில் அனந்தபுர் பொலிஸார் ரூபாலியை பிடித்து விசாரணை நடத்தியபோது, அவர் பிறந்து 21 நாட்களே ஆன குழந்தையை ரூ.4 இலட்சத்திற்கு விற்பனை செய்தது தெரியவந்துள்ளது.

விசாரணையின் போது மிட்னாபூரை சேர்ந்த கல்யாணி குஹா பெண்ணுக்கு திருமணமாகி 15 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லாத நிலையில் அவரிடம் பணம் வாங்கிக்கொண்டு குழந்தையை விற்றதாக ரூபாலி கூறியுள்ளார்.

ஹரியானா

# ஹரியானாவில் வன்முறை



ஹரியானா மாநிலத்தில் நுஹ் மாவட்டத்தில் விஷ்வ இந்து பரிஷத் எனும் இந்து அமைப்பினர் பேரணி நடத்தினர். இந்த பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இந்த பேரணி குருகிராம் அல்வார் தேசிய நெடுஞ்சாலை வந்த போது திடீரென அங்கு ஒரு குழு வந்ததாகவும், அப்போதும் இரு தரப்பினரிடையே வன்முறை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இஸ்லாமியர்கள் படுகொலை உள்ளிட்ட வழக்குகளில் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளியான பசு காவலர் மோனு மனேசரும் நிகழ்வில் கலந்துகொள்வார் என்று வதந்தி பரவிய நிலையில், இந்த வன்முறை வெடித்ததாக கூறப்படுகிறது.

இந்த வன்முறையில் ஹரியானாவில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். இதனை தொடர்ந்து புதுடெல்லி அருகே உள்ள குருகுராமிலும் வன்முறை வெடித்தது. இந்த வன்முறை சம்பவம் தொடர்பாக இதுவரை 116 பேர் கைது செய்யப்பட்டனர். 40 வழக்குகளை பதிவு செய்த பொலிஸார், 100க்கும் மேற்பட்டவர்களை விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளனர்.



கல்குடா பிறீமியர் லீக்:

# சம்பியனான வாழைச்சேனை நியூ ஸ்டார்

கல்குடா பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 10 கழகங்கள் பங்கேற்ற லீக் முறையிலும், விலகல் முறையிலும் 24 போட்டிகள் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் அல்-அக்ஸா விளையாட்டுக் கழகத்தை வென்றே நியூ ஸ்டார் சம்பியனானது.

இத்தொடரில் மூன்றாமிடத்தை வேர்ள் ஸ்டார் விளையாடுக் கழகம் பெற்றுக் கொண்டது.

பயேர்ண் மியூனிச்சிலிருந்து

# அல்-நஸாரில் இணைந்த சாடியோ மனே

சவுதி அரேபியக் கால்பந்தாட்டக் கழகமான அல்-நஸாரில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான சாடியோ மனே இணைந்துள்ளார்.



நான்காண்டு ஒப்பந்தமொன்றில் 31 வயதான மனே கைச்சாத்திட்டுள்ளதாக நல்-நஸார் தெரிவித்துள்ளது.

மியூனிச்சுக்கு 40 மில்லியன் யூரோக்களை அல்-நஸார் செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

சிநேகபூர்வ போட்டியில்

# ஏ.சி மிலனை வென்ற பார்சிலோனா

ஐக்கிய அமெரிக்காவில் நேற்று காலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்சு பாட்டி பெற்றிருந்தார்.

இந்நிலையில், ஜப்பானில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் இன்னொரு இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் வென்றது.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இந்தியா




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகளும் வென்றிருந்த நிலையில், ட்ரினிடாட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்று,2-1 என்ற ரீதியில் தொடரை இந்தியா கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 351/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 85 (92), இஷன் கிஷன் 77 (64), ஹர்டிக் பாண்டியா ஆ.இ 70 (52), சஞ்சு சாம்ஸன் 51 (41), சூரியகுமார் யாதவ் 35 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 1/38)

மே. தீவுகள்: 151/10 (35.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: குடகேஷ் மோட்டி ஆ.இ 39 (34), அலிக் அதனஸே 32 (50), அல்ஸாரி ஜோசப் 26 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 4/37, முகேஷ் குமார் 3/30, குல்தீப் யாதவ் 2/25, ஜெய்டேவ் உனத்கட் 1/16)

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில்

தொடரின் நாயகன்: இஷன் கிஷன்

இந்நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியானது இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெங்களூர்



# உலகின் மிக வயதான நபர் மரணம்

பிரேசிலைச் சேர்ந்த உலகின் மிக வயதான மனிதர் ஜோஸ் பாலினோ கோம்ஸ் வயது மூப்பு காரணமாக காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 127 ஆகும்.

அடுத்த வாரம் 128வது வயதில் அடிவைக்க இருந்த நிலையில், கோம்ஸ் உயிரிழந்துள்ளார். கோம்ஸின் திருமணச் சான்றிதழின்படி 1917ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ம் திகதி பிறந்தார். இவர், உலகப் போர்கள் மற்றும் மூன்று தொற்று நோய்களிலிருந்து தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்

# துனிசியாவின் முதல் பெண் பிரதமர் திடீர் நீக்கம்



வடக்கு ஆப்பிரிக்க நாடான துனிசியாவின் முதல் பெண் பிரதமராக, 64 வயதான நஜ்லா பவுடன் ரோம்தனே கடந்த 2021-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நியமிக்கப்பட்டார்.

துனிசிய தேசிய பல்கலைக் கழகத்தில் புவி அறிவியல் பேராசிரியராக பணிபுரிந்த இவர், பிரான்ஸ் நாட்டின் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். துனிசியாவில் பல்வேறு பேரிடர் தொடர்பான பணிகளில் சிறப்பான பங்களிப்பை அளித்தார். கல்வி சீர்திருத்த பணிகளில் முக்கிய பங்காற்றினார். அவர் துனிசியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்று அரசை வழி நடத்தி வந்தார். இந்நிலையில் நஜ்லா பவுடனை, பிரதமர் பதவியில் இருந்து நீக்குவதாக அதிபர் கைஸ் சையத் திடீரென்று அறிவித்துள்ளார்.

பெங்களூர்

# "இந்தியாவுடன் போரை விரும்பவில்லை"

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கனிமவள உச்சி மாநாட்டில் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கலந்து கொண்டார். அப்போது. "இந்தியாவுடன் போரை நடத்த விரும்பவில்லை. அனைத்து தீவிரமான மற்றும் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 03 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.